**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**திருக்கழுக்குன்றம்.**

முன்னிலை :– **திரு.S.வினீத், B.A.,B.L.,(Hon's)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
திருக்கழுக்குன்றம்.

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 30 ம் நாள் வியாழக்கிழமை
பராபவ வருடம் ஆடி மாதம் 14 ம் நாள்

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 135/2023**
**CNR No.TNCG120008792023**

அரசு தரப்பில்
காவல் உதவி ஆய்வாளர்,
கல்பாக்கம் காவல் நிலையம்
குற்ற எண் 10/2023.

.. குற்றமுறையிடுபவர்.

எதிர்

அப்துல்மாலிக், வயது 22/2023
த/பெ.சுலைமான்.

.. எதிரி.

**Case Summary**

| Sl.No. | Particulars | Report |
|---|---|---|
| 1 | The Period of remand of the accused | 27.02.2023 to 01.03.2023 |
| 2 | The date of filing of the complaint/final report in the Court | 31.07.2023 |
| 3 | The date of committal of the case to the Court of Session | Not Applicable |

<table>
<tr><td>4</td><td>The date of questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be</td><td>07.12.2023</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions Under Section 317 of the Code.</td><td>CMP No.893/2026<br>petition u/s.359 BNSS/320(2) Cr.P.C.-petition dismissed.</td></tr>
<tr><td>6</td><td>Date of examination in-chief and cross- examination of a witness:</td><td><table>
<tr><td></td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>16.07.2026</td><td>16.07.2026</td></tr>
<tr><td>PW2</td><td>16.07.2026</td><td>16.07.2026</td></tr>
<tr><td>PW3</td><td>20.07.2026</td><td>20.07.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under Section 313 of the Code:</td><td>22.07.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of abscondence of an accused and his appearance/productions, as the case may be: and NBW Pending/recalled</td><td>NIL</td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof.</td><td>NIL</td></tr>
</table>

இவ்வழக்கு 04.08.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.I.அம்மு

அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**1.** எதிரி மீது, அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில், கடந்த 25.01.2023 ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் புதுப்பட்டினம் மார்க்கெட் அருகில் உள்ள மூன்பாஸ்டுபுட் உணவகத்தில் உணவு சாப்பிடுவதற்காக சாட்சி சுப்பிரமணி மற்றும் வாய்பேச முடியாத அழகுசுப்பு இருவரும் சென்றபோது டேபிள் சுத்தம் செய்யாமல் இருந்தது குறித்து கேட்டபோது அவர்களிடம் எதிரி அப்துல்மாலிக் வீண் தகராறு செய்தும் இருவரும் சாப்பிட்டு விட்டு வெளியே வரும்போது அவர்களை பார்த்து "தெவிடியா பையா நீ சொன்ன நான் கிளின் பண்ணனுமா என்று அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த வேலிக்காத்தான் கட்டையால் சாட்சி சுப்பிரமணியின் தலையில் தாக்கியும் தடுக்க வந்த அழகுசுப்புவை கட்டையால் தாக்கி இனிமேல் எங்கள் ஓட்டலுக்கு வந்தால் உங்களை காலி செய்து விடுவேன் என்று மிரட்டியதாகவும், எனவே எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்), 506(ii)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2.** எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ய போதிய கால

அவகாசம் கொடுக்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்), 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் குறித்து விளக்கிக்கூறி வினவியபோது குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எதிரியின் குற்ற மறுப்பினையடுத்து அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரித்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரை குறியீடு செய்து வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**5.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சாராம்சம் பின்வருமாறு:–

**5.1.** புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 25.01.2023ம் தேதி இரவு 9.30 மணியளவில் தனது அண்ணன் சுப்பிரமணி மற்றும் அவருடைய நண்பரான அழகுசுப்பு என்பவருடன் சாப்பிடுவதற்காக புதுப்பட்டினம் மார்க்கெட் கேட் அருகில் உள்ள ஓட்டலுக்கு சென்றபோது அங்கு கும்பலாக இருந்தவர்களில் யாரோ தன் அண்ணனையும், அவரது நண்பரையும் பார்த்து அசிங்கமாக பேசி கட்டையால் அவர்களை தாக்கி காயம் ஏற்படுத்தி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள் என்றும், யார் அவ்வாறு செய்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும், அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும் கூறியதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும்

அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2** அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 25.01.2023 ம் தேதி இரவு 9.30 மணியளவில் தானும், தன்னுடைய நண்பரான அழகுசுப்புவும் சாப்பிடுவதற்காக புதுப்பட்டினம் மார்க்கெட் கேட் அருகில் உள்ள ஓட்டலுக்கு சென்றபோது அங்கு கும்பலாக இருந்தவர்களில் யாரோ தன்னையும், தனது நண்பரையும் பார்த்து அசிங்கமாக பேசி கட்டையால் தாக்கி காயம் ஏற்படுத்தி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள் என்றும், யார் அவ்வாறு செய்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் கூறியதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**5.3.** அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 26.01.2023 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் கல்பாக்கம் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 பாலசந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.10/2023 இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழ் வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரியை கைது செய்து நீதிமன்றக் காவலுக்குட்படுத்தி, எதிரி பயன்படுத்திய 32 அடி நீளமுள்ள வேலிக்காத்தான் கட்டை ஒன்றை மகஜரில் கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காயம்பட்ட அ.சா.2 சுப்பிரமணி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை விசாரணை செய்து அவர்களிடமிருந்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றை பெற்று இத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது

இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும், 3 அடி நீளமுள்ள வேலிக்காத்தான் கட்டை ஒன்று அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6.** இவ்வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1), (ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோது எதிரி அரசுத் தரப்பு சாட்சி கூறுவது பொய் சாட்சி என்றும், இவ்வழக்கு பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எதிரி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டது.

**7.** இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில், எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்), 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**8.** தீர்வு:– கடந்த 25.01.2023ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் புதுப்பட்டினம் மார்க்கெட் அருகில் உள்ள மூன்பாஸ்டுபுட் உணவகத்தில் உணவு சாப்பிடுவதற்காக வந்த அ.சா.2 சுப்பிரமணி மற்றும் அவரது நண்பரான வாய்பேச முடியாத அழகுசுப்பு இருவரிடமும் எதிரி வீண் தகராறு

செய்து மேற்படி இருவரும் சாப்பிட்டுவிட்டு வெளியே சென்றபோது அவர்களை பார்த்து அசிங்கமாக பேசி வேலிக்காத்தான் கட்டையால் அ.சா.2 ன் தலையில் தாக்கியும் தடுக்க வந்த அழகுசுப்புவை கட்டையால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததார் என்று எதிரி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

**9.** இவ்வழக்கில் நிகழ்வு புகார்தாரரான அ.சா.1 பாலசந்திரன் கொடுத்துள்ள புகாரில் கடந்த 25.01.2023 ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் புதுப்பட்டினம் மார்கெட் அருகில் உள்ள மூன்பாஸ்டுபுட்டில் டிபன் சாப்பிட தனது அண்ணன் சுப்பிரமணி அவரது நண்பர் அழகுசுப்பு என்பவருடன் சென்றபோது மாலிக் என்பவர் அவர்களிடம் வீண் வம்பு செய்தும், இருவரும் சாப்பிட்டுவிட்டு வெளியே வரும் போது மாலிக் என்பவர் தகாத வார்த்தைகளால் திட்டி கையில் வைத்திருந்த கட்டையால் தனது அண்ணன் தலையில் தாக்கியும், தடுக்க சென்ற அழகுசுப்புவையும் கட்டையால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்று தெரிவித்துள்ளார். மேற்படி புகாரின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் உசேனுதீன் காவல் நிலைய குற்ற எண்.10/2023 இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழ் வழக்கு பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**10.** இவ்வழக்கில் புகார்தாரர் பாலசந்திரன், காயம்பட்ட சுப்பிரமணி மற்றும் எதிரி அப்துல்மாலிக் ஆகிய இரு தரப்பினரும் கடந்த 16.07.2026 அன்று இவ்வழக்கில் சமாதானமாக போவதாக கூறி 359 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்தார்கள். எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் சட்டப்பிரிவுகள் 294(b), 324 ஆகிய பிரிவுகள் சமாதானமாக போகக்கூடிய குற்ற பிரிவுகள் இல்லை என்பதால் இந்நீதிமன்றத்தால் அன்றைய தினமே

மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி புகார்தாரர் பாலசந்திரன் அ.சா.1 ஆகவும், காயம்பட்ட சுப்பிரமணி அ.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டார்கள்.

**11.** இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியாக முன்னிலைபடுத்தப்பட்டுள்ள மேற்படி அ.சா.1, அ.சா.2ன் சாட்சியங்களை ஆழ்ந்து பரிசீலிக்கையில், கும்பலில் இருந்த யாரோ அ.சா.2 மற்றும் வாய்பேசமுடியாத அழகுசுப்பு இருவரையும் அசிங்கமாக பேசி, கட்டையால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். எனவே, மேற்படி அ.சா.1, அ.சா.2ன் சாட்சியங்கள் எதிரியை வழக்கு குற்றங்களுடன் தொடர்புபடுத்துவதாக இல்லை.

**12.** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1, காயம்பட்ட அ.சா.2 மற்றும் எதிரி ஆகிய இருதரப்பினரும் சமாதானமாக போவதாக கூறி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அ.சா.1, அ.சா.2 இருவரும் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளதால் வழக்கின் மற்ற சாட்சிகளை விசாரணை செய்வதால் எந்த பலனும் இல்லை என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு, புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் உசேனுதீன் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.9 வரையும் மற்றும் அ.சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டது.

**13.** இவ்வழக்கில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலிக்கையில், புகார்தாரர் அ.சா.1, காயம்பட்ட அ.சா.2 இருவரும் பிறழ் சாட்சியாக மாறியுள்ள நிலையிலும், மேற்படி அ.சா.1, அ.சா.2 மற்றும் எதிரியும் சமாதானமாக போவதாக கூறி 359 BNSS–ன் கீழ் மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ள நிலையிலும், அலுவல் சாட்சியான அ.சா.3 ன் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரி மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வருவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அரசு தரப்பால் எதிரி மீது முன்னிறுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க தவறிவிட்டதாக கருதி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**<u>14. முடிவாக</u>**

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்) மற்றும் 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும் எனவே, எதிரியை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**15.** இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள தடய சொத்தான C.P.No.144/2023 அ.சா.பொ.1 ஆன சுமார் 3 அடி நீளமுள்ள வேலிக்காத்தான் கட்டை ஒன்றை வழக்கின் மேல் முறையீட்டுக்காலம் முடிந்த பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**16.** எதிரி ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில் மேல்

முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல் முறையிடு செய்யவில்லை எனில் மேல் முறையிட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைப் பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd) S.Vineeth, 30.07.2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், திருக்கழுக்குன்றம்.

பின் இணைப்பு:–
அரசு தரப்பு சாட்சிகள் அட்டவணை

| சாட்சிகள் | பெயர்கள் | சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு.பாலசந்திரன் | புகார்தாரர் (பிறழ் சாட்சி) |
| அ.சா.2 | திரு.சுப்பிரமணி | காயம்பட்ட நபர் (பிறழ் சாட்சி) |
| அ.சா.3 | திரு.உசேனுதீன் | காவல் உதவி ஆய்வாளர்,<br>புலன் விசாரணை அதிகாரி. |

அரசு தரப்பு சான்றாவணங்கள்:–

| ஆவண வரிசை | சான்றாவணங்கள் | யாரால் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | தேதியிட்ட புகாரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும். | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | தேதியிட்ட புகார் மனு | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | தேதியிட்ட பார்வை மகஜர் | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | தேதியிட்ட மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | தேதியிட்ட படிவம் 91 | அ.சா.3 |
| அ.சா.ஆ.8 | தேதியிட்ட விபத்து பதிவேடு | அ.சா.3 |
| அ.சா.ஆ.9 | தேதியிட்ட காயச்சான்று | அ.சா.3 |

<u>அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்</u>:–

| சான்றுப்பொருள் வரிசை | தடய சொத்து | யாரால் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.சா.பொ.1 | 3 அடி நீளமுள்ள வேலிக்காத்தான் கட்டை ஒன்று | அ.சா.3 |

<u>எதிரி தரப்பு சாட்சி</u>:– இல்லை.

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>:– இல்லை.

<u>எதிரி தரப்பு சான்றுப் பொருள்</u>:– இல்லை.

(Sd) S.Vineeth, 30.07.2026
**மா.உ.நீ.ம.கு.ந./தி.க.கு.**